# தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்

உங்கள் மேலான அழைப்பை நீங்கள் உறுதி செய்தவர்களாயும், உங்களை அழைத்தவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதையும், அவர் வார்த்தையில் உண்மையுள்ளவர் என்பதையும் அறிந்தவர்களாயும், விசுவாசத்தை அறிக்கை செய்தில் உறுதியுள்ளவர்களுமாயிருந்து, இலக்கின்மேல் கண்களை வைத்து முன்னேறிச் செல்லுங்கள். ஆதி அப்போஸ்தலரின் நாட்களிலே, அவர்கள் மத்தியிலே சோதனையின் அக்கினி பற்றியெரிந்தது. பலவிதமான உபத்திரவங்களையும், நிந்தைகளையும் அனுபவித்தார்கள். கிறிஸ்து வெளிப்படும் போது, உண்டாகும் மகிமையை விசுவாசக் கண்களால் கண்டவர்களாக, அழைத்தவருடைய நாமித்தினிமித்தம் பாடுகளையும் வேதனைகளையும் சகித்தார்கள். இந்நாட்களிலும், சில தேசங்களிலே அத்தகைய பாடுகளையும் வேதனைகளையும் சிலர் எதிர்நோக்குகின்றார்கள் என்பதை அவ்வப்போது செய்திகள் வாயிலாக அறிந்து கொள்கின்றோம். உங்களுடைய வாழ்விலே, உங்கள் குடும்பத்திலே, உங்கள் வேலையிலே, உங்கள் சபை ஐக்கியத்திலே உங்களை நெருக்குகின்ற காரியங்கள் என்ன? எதைக் குறித்து மனவேதனையடைந்து, கவலையடைகின்றீர்கள்? "நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள் ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார் அவர் களாலே தூஷிக்கப்படுகிறார் உங்களாலே மகிமைப்படுகிறார். ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்." என்று 1 பேதுரு 4ம் அதிகாரத்திலே வாசிக்கின்றோம். எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்படிக்கு, உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் பெரிய காரியமோ, சிறிய காரியமோ, எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அழைத்த தேவன் உண்மையுள்ளவர். அவர் கைவிடமாட்டார். அவர் உங்களுக்கு சமீபமாயிருக்கின்றார்!

**எபிரெயர் 13:5**

**நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.**

**ஜெபம்:** நித்திய கனமகிமைக்கென்று என்னை அழைத்த தேவனே, என்னை நெருக்குகின்ற எந்த காரியத்தாலும் நான் சோர்ந்து பின்னிட்டு போகதபடிக்கு என்னை பெலப்படுத்தி உம் வார்த்தையின் வெளிச்சத்தில் வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பிரதான ஆசாரியரை நோக்கி பாருங்கள்

**எபிரெயர் 4:15**

எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து, பிலிப்பிருக்கு தேவ ஊழியராகிய பவுல் எழுதின நிருபத்தின் கருப்பொருளை மையமான வைத்து, எங்கள் வாழ்க்கையை தேவ வார்த்தையின் வெளிச்சத்தில் தியானித்து வருகின்றோம். இரண்டாம் அதிகாரத்தின் ஆரம்பத்திலே விசுவாசிகள் ஏக சிந்தையள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றும், கிறிஸ்துவின் சிந்தையை தரித்துக் கொள்ள வேண்டும் என்பதையும் குறிப்பிட்டிருப்பதை காணலாம். 3ம் அதிகாரத்திலே இலக்கை நோக்கிய சிந்தை குறித்து வலியுறுத்தி கூறினார். மறுபடியும் 4ம் அதிகாரத்திலே, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக பிரயாசப்பட்டவர்கள் மத்தியிலே ஒரே சிந்தை இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கின்றார். கிறிஸ்துவின் சிந்தையைவிட்டு, விசுவாசிகள் வேறு சிந்தையாக இருக்கும் போது, அங்கே வாக்குவாதங்களும், கலகங்களும், குழப்பங்களும் உண்டாகும். அப்படியாகும்போது, விசுவாசிகள் சந்தோஷமாக இருக்க முடியாது. உங்களை விசாரிக்கின்ற தேவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கின்றார். உங்களுக்காக தன்னை தான் பலியாக ஒப்புக் கொடுத்தவர் உங்கள் நிலைமையை அறியாதிருப்பாரோ? எனவே உங்கள் சிந்தைகளை கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக் கொள்ளுங்கள். உங்கள் பெலவீன நேரங்களிலே அவர் பெலன் தந்து நடத்துகின்றவராயிருக்கின்றார். “வானங்களின் வழியாய்ப் பரலோக த்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீன ங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாத வராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.” உங்களை அழுத்தும் பாரங்களையும், உங்களைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிப்போடுங்கள். விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள். அவருடைய சிந்தையை தரித்தவர்களாக, உங்களுக்கு நியமித் திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடுங்கள்.

**ஜெபம்:** என் சிந்தையை முன்அறிந்த தேவனே, வாதுக்கும் வழக்குக்கும் உரிய காரியங்களை என்னைவிட்டு அகற்றிவிடும்படி, எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து என்னை உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வேதமே மனமகிழ்ச்சி

சங்கீதம் 119 அதிகாரமானது, பரிசுத்த வேதாகமத்திலே நீண்ட அதிகாரமாக இருக்கின்றது. அந்த அதிகாரத்திலே 176 வசனங்கள் உண்டு. கர்த்தருடைய வேதம், கர்த்தருடைய சாட்சி, கர்த்தருடைய கற்பனைகள், கர்த்தருடைய நீதி நியாயங்கள், கர்த்தருடைய பிரமாணங்கள், கர்த்தருடைய வசனம், கர்த்தருடைய உண்மை, கர்த்தருடைய நன்மை போன்ற வார்த்தைகளில் ஒன்றை ஒவ்வொரு வசனங்களிலும் அடங்கிய சங்கீதமாக இருக்கின்றது. அந்த சங்கீதத்திலே, களிகூருவது பற்றியும், மனமகிழ்ச்சியாயிருப்பதைப் பற்றியும் இருப்பதைக் குறித்து கூறும் வசனங்கள் பல உண்டு. அவற்றுள் சில: "உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்." "திரளான செல்வத்தில் களிகூருவதுபோல, நான் உமது சாட்சிகளின் வழியில் களிகூருகிறேன்." "உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன்." "உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன் உமது வசனத்தை மறவேன்." "நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளின்பேரில் மனமகிழ்ச்சியாயிருப்பேன்." "அவர்கள் இருதயம் நிணந்துன்னிக் கொழுத்திருக்கிறது" "நானோ, உம்முடைய வேதத்தில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன். உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்தரமாக்கிக்கொண்டிருக்கிறேன், அவைகளே என் இருதயத்தின் மகிழ்ச்சி." மனமகிழ்சியான, சமாதானம் நிறைந்து, எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்மியமாக இருக்கும் வாழ்வானது கர்த்தருடைய வார்த்தைக்குள் அடங்கியிருக்கின்றது. அந்த வழியிலே வேதனைகள் இல்லை. இருளின் பதையிலே நடக்கின்றவர்கள், வழிதவறி, இடறி விழுந்து தங்களை உருவக் குத்திக் கொள்கின்றார்கள். ஆனால், பகலிலே நடக்கின்றவர்கள், போகும்பாதையை அறிந்திருக்கின்றார்கள். கர்த்தருடைய வசனம் விசுவாசிகளின் கால்களுக்குத் தீபமும், அவர்களின் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. எனவே, அந்த வார்த்தைகளை வாசியுங்கள், அதை அனுதினமும் தியானியுங்கள். உங்கள் வாழ்விலே அவைகளை நடைமுறைப்படுத்துங்கள். அவைகளின் படி நடக்கின்றவர்கள் நஷ்டப்பட்டுப் போவதில்லை. அவர்களுடைய சந்ததி ஆசீர்பெற்ற சந்ததியாக இருக்கும். அந்த வார்த்தையிலே நித்திய ஜீவன் உண்டு. சத்திய வழியிலே நடத்தும் ஆவியானவர்தாமே உங்களோடு இருக்கின்றார். கர்த்தர் விளம்பிய வேதமே விசுவாசிகளின் வாழ்வின் மனமகிழ்சியாக இருக்கின்றது.

**சங்கீதம் 119:174**

**கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்பின்மேல் ஆவலாயிருக்கிறேன்; உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி.**

**ஜெபம்:** வாழ்வு தரும் வார்த்தைகளை விளம்பிய தேவனே, என் ஆத்துமாவை உயிர்ப்பிக்கின்ற உம்முடைய குறைவற்ற வேதத்தின் வழியிலே நான் நடக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து என்னை வழிநடத்திச்செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எங்கள் பெலன்

ஒரு ஊரிலே இயங்கி வந்த கழகத்தின் உதைபந்தாட்ட அணியிலே இருந்த விளையாட்டு வீரனொருவன், உதைப்பட்டாத விளையாட்டிலே மிகவும் சிறந்து விளங்கி வந்தான். அந்த கழகத்தின் குழுவை எதிர்த்து விளையாடும் அணிகள் யாவரும் அவனுடைய திறமையை பார்த்து ஆச்சரியப்பட்டு வந்தார்கள். ஒருநாள் அவன் குடும்பத்திலே நடந்த எதிர்பாராத சம்பவமொன்றினால், மிகவும் துக்கமடையந்து மனம் சோர்ந்து போனான். அந்நாட்களிலே அவன் கலந்துகொண்ட வியைாட்டு போட்டிகளிலே, அவனுடைய அணி தோற்றுப் போயிற்று. வழமையாகவிளையாடுவது போல, முழு பலத்தோடும், பூரண ஆர்வத்தோடும் அவனுக்கு விளையாட முடியவில்லை. அதைப் பார்பவர்கள் யாவரும் கண்டு கொண்டார்கள். அதனால் அவர்களை எதிரிட்டு விளையாடும் அணிகள், இலகுவாக இவர்களை தோற்கடித்தார்கள். ஆம் பிரியமானவர்களே, பொதுவாக மனம் சோர்ந்து போயிருக்கும் நாட்களிலே, மனிதர்கள் வாழ்வின் நோக்கத்தை குறித்த ஆர்வமானது குறைந்து போய்விடுகின்றது. பெலமுள்ள மனிதர்களுடைய பெலனும் குறைந்து போய்விடுகின்றது. இந்த இயற்கை நியதிக்கு விசுவாசிகள் விதிவிலக்கானவர்கள் அல்ல. ஆனால், தேவனுடைய கிருபையானது அவர்மேல் நம்பிக்கையாக இருக்கின்ற மனுஷனை உயிர்ப்பிக்கின்றது. இந்த பூவுலக வாழ்க்கையிலே ஆத்துமா வியாகுலப்படும் சந்தர்பங்கள் உண்டு. உலகத்திலே சஞ்சலத்தால் இருதயம் கரைந்து போகும் நேரங்கள் உண்டு. அவை யாவற்றையின் மத்தியிலும் நாம் ஆரம்பத்தில் அறிக்கை செய்த விசுவாச வார்த்தையை பற்றிக் கொள்ள வேண்டும். மேலே குறிப்பிட்ட ஒப்பனையின்படி, அந்த விளையாட்டு வீரனுடைய மனச்சோர்வின் நேரத்திலே, எதிர்த்து விளையாடும் அணிகள் அவனுடைய அணியை மேற்கொண்டது போல, ஒரு விசுவாசியாவன்,மனக்கவலைஅடைந்து,சோர்ந்து போயிருக்கும் வேளைகளிலே, ஆவிக்குரிய வாழ்க்கையிலே, எதிராளியாகிய பிசாசானவன் விசுவாசியனவனின் சோர்வின் வேளைகளிலே அவனை இலகுவாக மேற்கொள்ளும்படி இடங்கொடுக்கின்றான். இக்கட்டு வேளைகளிலும், கர்த்தருடைய வேதத்தை விசுவாசித்து, அவருடைய வேளைக்காக காத்திருக்கின்றவன், அவருக்குள் அவன் ஆத்துமா மனமகிழ்சி யாயிருக்கும்படி தன்னை பயிற்சிவித்துக் கொள்கின்றான். கர்த்தருக்குள் மனமகிழ்சியாய் இருப்பதே விசுவாசியின் பெலன். அப்ப டியாக மனமகிழ்சியாய் இருக்கின்றவனை எதிராளியானவன் மேற் கொள்ள முடியாது. அவன் என்றென்றும் அசையாமல் அவருக்குள் நிலைத்திருக்கின்றான்.

**நெகேமியா 8:10**

**கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, எல்லா வேளைகளிலும் நான் உம்முடைய வார்த்தையை நம்பி, உம்முடைய வேளைக்காக பொறுமையுடன் காத்திருக்கும்படி எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | ஆகஸ்ட் 5

📖 மாலை வாசகம் – ரோமர் 12:1 –2

# மனதின் யோசனைகள்

ஒரு ஊரிலே வாழ்ந்த வந்த வயதான பாட்டனார் ஒருவர், வீட்டின் அருகிலுள்ள மரத்தின் நிழலிலே இளைப்பாறும்படி அமர்ந்திருந்தார். அவ்வழியாக வந்த, அந்த அயலிலே வாழ்ந்த மனிதனொருவன், அந்த வயதானவரை பார்த்து: ஐயா, என்ன அதிகமாக யோசிக்கின்றீர்கள்? என்று கேட்டான். அதற்கு அவர் மறுமொழியாக: யோசனையில்லாத மனிதன் யார்தான் இருக்கின்றார் கள் என்று கூறிக் கொண்டார். "இத யம், மனித இதயம் அதில் ஆயிரம் எண்ணங்கள் உதிக்கும்" என்று ஒரு கிறிஸ்தவ பாடலின் வரிகள் அமை க்கப்பட்டுள்ளது. மனதில் தோன் றும் எண்ணங்களை கட்டுப்படுவதற்கு, இந்த உலகத்திலே அநேக வழி முறைகளை கூறிக்கொள்கின்றார்கள். அவைகளின் பலன் தற்காலி கமா னவைகள். "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள். நகைப்பிலும் மனதுக்குத் துக்க முண்டு. அந்த மகிழ்ச்சியின் முடிவு சஞ்சலம்." தேவனுடைய பிள்ளை களாகிய நாம், இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கக்கூடாது. நம்முடைய யோசனைகள் இந்த உலக ஞானிகளின் ஆலோசனை களின்படியி ல்லாமல், சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மெய் ஞானத்தினால் உண்டாகும் ஆலோசனைகளுக்குரியதாக வேண்டும். தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்த றியத்தக்கதாக, நம்முடைய மனம் புதிதாகிறதினாலே மறுரூபம டைய வேண்டும் என்று ரோமர் 12ம் அதிகாரத்திலே வாசிக்கின்றோம். பிரியமா னவர்களே, "கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தி யுமி ல்லை, ஆலோசனையுமில்லை." "மனுஷனுடைய இருதயம் அவனு டைய வழியை யோசிக்கும் அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகி றவரோ கர்த்தர்." விசுவாசிகளின் வாயின் வார்த்தைகளும், இருதயதின் தியானங்களும் ஒத்திருக்க வேண்டும். அவை யாவும் தேவனுடைய சமுகத்திலே ஏற்புடையதாக இருக்க வேண்டும். எனவே, உங்கள் வாழ்விலே, உயர்விலும், தாழ்விலும், வேதனைகளிலும், சோதனைக ளிலும் கர்த்தருடைய ஜீவ வார்த்தைகளை தியானியுங்கள். அவைக ளையே உங்கள் வாயினால் அறிக்கையிடுங்கள். நீடிய பொறுமையு ள்ளவர்களாயிருங்கள். அவைகளை உறுதி யாய் பற்றிக் கொண்டி ருங்கள். மனுஷனுடைய இருதயத்தின் எண்ண ங்கள் அநேகம் ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்.

**நீதிமொழிகள் 19:21**

**மனுஷனுடைய இருதயத் தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்.**

**ஜெபம்:** ஆலோசனைகளில் ஆச்சரியமான தேவனே, என்னுடைய சுய யோசனைகள் நிலையற்றவைகள் எனவே, நான் உம்முடைய ஆலோசனைகளின் வழியிலட நடக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிநறன் ஆமேன்.

# பரலோக சமாதானம்!

இக்கட்டும் நெருக்கமும் ஒரு மனிதனை சூழ்ந்து கொள்ளும் போது, நண்பர்கள் உறவினர்கள் அவனுக்கு ஆறுதல் வார்த்தைகளை கூறிக்கொள்வார்கள். ஆனாலட ஒரு மனிதன் ஆராதுயரத்தில் இருக்கும் போது எப்படி ஆறுதலட அடைய முடியும்? எப்படி அவனுக்கு மனச் சமாதானம் சாத்தியமாகும். மனிதர்கள் தங்கள் மனதில் மறைந்திருக்கும் வேதனைகளோடு, தாங்கள் நன்றாக இருக்கின்றோம் என்று மற்றவர்களுக்கு காண்பிக்ககூடிய இயல்புள்ளவர்கள். சிலர் தங்கள் துக்கங்களை ஆற்ற, சில தவறான பழக்கத்திற்குள் தங்கள் சரீரங்களை பயிற்சிவித்துக் கொள்கின்றார்கள். 42ம் சங்கீதத்தை ஆரம்பிக்கும் போது: மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது. நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்? உன் தேவன் எங்கே என்று அவர்கள் நாள்தோறும் என்னிடத்தில் சொல்லுகிறபடியால், இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று என்று தன்னுடைய உள்ளான நிலைமையைக் குறித்து பாடிய சங்கீதக்காரன், தொடர்ந்து பாடுகையில், என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு. அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத் துதிப்பேன். என் தேவனே, என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது. ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் சிறுமலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன் என்றார். தேவனுடைய விசுவாசிக்கு ஏற்பட்ட கலக்கமான சூழ்நிலையிலே, அவர் இரண்டு காரிங்களை செய்கின்றார். முதலாவதாக: கர்த்தருடைய இரட்சிப்பினிமித்தம் அவரை துதிக்கின்றார். இரண்டாவதாக: அவர் எங்கிருந்தாலும், தேவனை குறித்த சிந்தையே அவருக்குள் இருந்தது. அப்படியாக இருக்கும் விசுவாசிக்கு உண்டாகும் தெய்வீக சமாதானமானது, கிறிஸ்து இயேசுவுக்குள்: முதலாவதாக இருதயத்தைக் எல்லாக் காவலோடும் காத்துக் கொள்கின்றது. இரண்டாவதாக: ஒரு விசுவாசிக்கு உண்டாயிருக்க வேண்டிய கிறிஸ்துவின் சிந்தையையும் காத்துக் கொள்கின்றது. இந்த மனச் சமாதானத்தை எந்த மனிதனாலும் எந்த மனிதனுக்கும் கொடுக்க முடியாது. இது தேவனாலே மாத்திரம் கூடும். இது பரலோக சமாதானம். ஆதை அவர் தம்முடையவர்களுக்கு அருளுகின்றார்.

**சங்கீதம் 73:26**

**தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்.**

**ஜெபம்**: என் கன்மலையாகிய கர்த்தாவே, என் வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் நான் உம்மில் நிலைத்திருக்கும்படி பகற்காலத்திலே உம்முடைய கிருபையும், இராக்காலத்திலே உம்மை துதித்து பாடும் பாட்டு என் வாயிலிருப்பதாக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனதை குழப்பும் காரியங்கள் என்ன?

தேவனாகிய கர்த்தர் தாமே, தாம் தெரிந்து கொண்ட தம்முடைய ஜனங்களை நோக்கி: "நான் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து, உன்னை எடுத்து, அதின் எல்லைகளிலிருந்து அழைத்துவந்து: நீ என் தாசன், நான் உன்னைத் தெரிந்துகொண்டேன், நான் உன்னை வெறுத்துவிடவில்லை என்று சொன்னேன். நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன் திகையாதே, நான் உன் தேவன் நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன் என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்." (*ஏசாயா 41:10*) கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகநாமும் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கின்றோம். உங்கள் சொந்த வாழ்க்கையிலே உங்களை கலங்க வைக்கும் காரியம் என்ன? உங்கள் குடும்பத்திலே உங்களை துக்கப்படுத்தும் காரியம் என்ன? வேலை செய்யும் இடத்திலே உங்களுக்கு பிரச்சனை உண்டாகும் காரியங்கள் என்ன? சபை ஐக்கியத்திலே உங்களை குழப்பும் காரியம் என்ன? நித்திய ஜீவனுக்கென்று அழைப்பை பெற்ற அருமையான சகோதர சகோதரிகளே, நீங்கள் உங்கள் அழைப்பை மறந்து விட்டீர்களா அல்லது உங்களை அழைத்தவர் இன்னார் என்பதை மறந்து விட்டீர்களா? அவர் தம்முடைய ஜனங்களை நோக்கி: "பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை் இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது. சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்." (*ஏசாயா 40:28-31*). உங்களையும் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து பிரித்தெடுத்தவர், பூமியின் கடையாந்தரங்களை சிருஷ்டித்தவர் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவரே உங்களை தெரிந்து கொண்டவர். அவர் சர்வ வல்லமையுள்ளவர்! அவர் தம்முடைய வாக்கிலே உண்மையுள்ளவர்.

**மத்தேயு 11:28**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

**ஜெபம்**: உன்னதமான தேவனே, நீர் என்னை அழைத்த அழைப்பின் மேன்மையை உணர்ந்தவனாக, உம் வார்த்தையிலே உறுதியாய் நிலைத்திருந்து, கனி கொடுக்கும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனுக்கேற்ற நினைவுகள்!

ஒரு காரியத்தை செய்யும் போது, அதனால் உண்டாகக்கூடிய பெருந்தோல்வியை சந்திக்க ஆயத்தமாயிரு, ஒருவேளை காரியம் வாய்தால் அது உனக்கு எதிர்பாரத வெற்றியும் மகிழ்ச்சியும் உண்டாகும். காரியம் வாய்க்காவிட்டால், நீ எதிர்பார்த்த நட்டம் உனக்கு உண்டாயிருக்கும் என்பது சில மனிதர்களின் கொள்கையாக இருக்கின்றது. இன்னுமொரு சாரார், தோல்வியைப் பற்றி சிந்திக்காதே, வெற்றியை நிச்சயம் என்று ஓடு. ஏனைய காரியங்களை குறித்து கவலையடைவதில் நேரத்தை செலவிடாதே என்ற கொள்கையுடையவர்களாக இருக்கின்றார்கள். இப்படியாக, இந்த உலகத்திலே, மனிதர்களில் கொள்கைகள் வேறுபட்டிருக்கின்றது. அவர்களுடைய இருதயத்தின் நினைவுகளும், அவர்களுடைய வழிகளும் வேறுபட்டிருக்கின்றது. ஏசாயா தீர்க்கதரிசியின் நாட்களிலே, தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனங்களை நோக்கி: "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல் உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." என்று கூறினார். கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருடைய நினைவுகளை உணருகின்றவர் யார்? தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாக இருக்கின்ற அருமையான சகோதர சகோதரிகளே, (1 கொரி 2:16), மனிதர்களுடைய கொள்கைகளுக்கும், அவர்களுடைய வழிகளுக்கும் நீங்க் இடங்கொடாமல், மேலானவைகளை சிந்தியுங்கள். இந்த பூலோகத்திற்குரியவைகளையல்ல, பரலோகத்திற்குரிய பண்புகளை சிந்தையாக கொண்டிருங்கள். உங்கள் வழிகளை கர்த்தருக்கு ஒப்புக் கொடுங்கள். மனிதனுக்கு செம்மையாக தோன்றும் வழிகளிலே செல்லாமலும், மாம்சத்தின் இச்சைகள் இருதயத்தில் தங்க இடங்கொடாமல், ஆவி க்குரிய தெய்வீக சுபாவங்களுக்கு அங்கே இடங் கொடுத்து, அவைக ளையே சிந்தியுங்கள், தியானியுங்கள். கர்த்தருடைய ஆவியானவனர் எங்கேயோ அங்கே விடுதலை உண்டு.

**மத்தேயு 6:16**

**என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்.**

**ஜெபம்:** மனுஷனுடைய யோசனைகள் வீணென்று அறிந்த தேவனே, நான் வீணான உலக சிந்தனைகளை வெறுத்து, எப்பொழுதம் உமது வேதத்தில் பிரியமாயிருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | ஆகஸ்ட் 9 | 📖 மாலை வாசகம் – பிலிப்பியர் 4:8

# முந்தின சிந்தனைகள் வேண்டாம்

ஒரு மாணவனானவன், வாலிப பிரயாத்திலே சில தவறான பழக்கவழக்கமுள்ள சக மாணவர்களுடன் நட்பாயிருந்தான். அவர்கள் அவன் வசிக்கும் வீட்டிற்கு சற்று தொலைவில் இருந்த போதும், அவன் அவ்வவ்போது போக்கும்வரத்துமாக இருந்து வந்தான். அவனுடைய பெற்றோர் பலமுறை புத்திமதி கூறினார்கள். ஆனாலும், ஏதோ ஒரு வகையிலே அவர்கள் இருக்கும் இடத்திற்கு சென்று வந்தான். ஒரு நாள், அவன் அவர்களோடு சேர்ந்து பொல்லாப்பு ஒன்றில் அகப்பட்டுவிட்டான். அவனுடைய தகப்பனானவர், அவ்விடத்திற்கு விரைந்து சென்று, அவனை காப்பாற்றினார். இனி அங்கு செல்லாதே என்று அவனை கண்டித்து, அவனுக்கு பல புத்திமதிகளை கூறினார். அதனால் உண்டாகக்கூடிய பாதகமான பின்விளைவுகளை பற்றி எடுத்துரைத்தார். அப்படியிருந்தும், சில நாட்கள் சென்ற பின்பு அவன் அந்த நண்பர்கள் இருக்கும் இடத்திற்கு சென்றுவிடுவான். இது ஒரு முடியாத தொடர்கதையாக இருந்தது. ஆனால், அது பயங்கரமான முடிவை உண்டு பண்ணும் என்பதை குறித்து அவன் உணர்வற்றவனாக இருந்தான். பொல்லாப்பு விலகி வாழ்வதற்கு அவன் தகப்பனானவர் உதவுவதற்கும், ஆலோசனை கூறுவதற்கும் எப்போதும் ஆயத்தமுள்ளவராக இருந்தார். ஆனால், மகனானவனோ, தன்னுடைய பக்கத்தில் தான் செய்ய வேண்டிய முன்னேற்பாடுகளை செய்ய மனதில்லாதவனாக இருந்தான். விடுதலயடைந்து சமாதானமான வாழ்வு வாழ்வதற்கு இரண்டு சாராரும் ஒன்றாக செயற்பட வேண்டும். அதுபோலவே, ஒரு விசுவாசியின் ஆவிக்குரிய வாழ்விலும், அவன் தன் துக்கங்கள், கவலைகளை தேவனிடம் தெரியப்படுத்தி, அவர் பாதத்திலே பாரங்களை இறக்கி வைக்கின்றான். தேவ சமாதானத்தை பெற்றுக் கொள்கின்றான். அதை காத்துக் கொள்வதற்கு, அவன் தன்னுடைய பக்கத்திலே செய்ய வேண்டிய காரியங்கள் உண்டு. அவைகளிலே முக்கியமானதாக, அவன் தன் சிந்தனையில் இருப்பவைகளை குறித்து எச்சரிக்கையுள்ளவளாக இருக்க வேண்டும். தன்னுடைய சிந்தனையை மறுபடியும், பழைய வாழ்க்கை முறையினால் நிரப்பிக் கொள்ளகூடாது. சமாதானத்தை குழப்பி, பாவத்திற்கு வழிவகுக்கும் சம்பவங்களை கற்பனை செய்யாமல், தேவனுக்குரியவைகளை தியானிக்க பழகிக் கொள்ள வேண்டும். அந்த வாலிபனானவன், தன் பழைய வாழ்க்கைக்கு திரும்ப மனதுள்ளவனாக இருந்ததுபோல, விசுவாசியாவன் தன் சிந்தயை பழைய காரியங்களை, சிந்திப்பதற்கு இடங்கொடுக்கக் கூடாது.

**ஏசாயா 43:18**

**முந்தினவைகளை நினைக்க வேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்கவேண்டாம்.**

**ஜெபம்:** வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குகின்ற தேவனே, பழைய வழிகளுக்கு என்னை நடத்திச் செல்லும் சிந்தனைகளை என்னைவிட்டு அகற்ற எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கின்றேன் ஆமென்.

திங்கள் | ஆகஸ்ட் 10 | மாலை வாசகம் - கலா 5:19-23

# இருதயத்திலிருந்து புறப்படுபவைகள்

தேவ சமாதானம் உங்கள் இருதயங்களை ஆளுகை செய்யும்படிக்கு, தேவனாகிய கர்த்தர்தாமே எப்போதும் உதவி செய்ய ஆயத்தமுள்ளவ ராகவே இருக்கின்றார். ஆனால், விசுவாசிகள் தங்கள் பக்கதிலிருந்து செய்ய வேண்டிய காரியங்கள் உண்டு என்பதைக குறித்தும், விசுவா சிகளை தூரமான இடங்களுக்கு கொண்டு செல்லககூடிய பொல்லாத சிந்தனைகளைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசுதாமே இவைகளைகுறித்து கூறும் போது: "மனுஷனுக்குள்ளே இருந்து புறப் படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படு த்தும். எப்படியெனில், மனுஷரு டைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விப சாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுக ளும், பொருளாசைகளும், துஷ்ட த்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாங்கானவைகளாகிய இவைக ளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்ப டுத்தும்" என்றார். இவைகள் யாவும், தேவ சமாதானம் உங்கள் இருத யங்களை ஆளாபடிக்கு, உங்களை பழைய வாழ்விற்று வழிநடத்தும் சிந்தனை களாக இருக்கின்றது. இவைகள் கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகள் அல்ல. இவைகள் மாம்ச இச்சைக்குரியவைகள். விசுவாசிகள் தங்கள் சிந் தையை காத்துக் கொள்ளும்படிக்கு அவர்கள் சிந்திக்க வேண்டிய காரியங்கள் என்ன என்பதைக்குறித்து தேவ ஊழியராகிய பவுல், பிலிப்பியர் 4 அதிகாரம் 8ம் வசனத்திலே இவ்வாறு கூறியிருக்கின்றார். "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்க முள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ள வைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ,நற்கீர்த்தியுள்ள வை களெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்." இவைகள் இந்த உலகத்தின் நியதிப் படியல்ல, மாறாக, பரிசுத்த வேதாகமம் கூறுவது போல விசுவாசிகள் தங்கள் வாழ்விலே சிந்திக்க வேண்டும். பிரியமாவர்களே, வீணான சிந் தனைகளுக்கு இடங் கொடுத்து, மனதிலே குழப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளாமல், தேவனுக்குரியவைகளை சிந்தியுங்கள்.

**கொலோசெயர் 3:15**

**தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்.**

**ஜெபம்**: பரிசுத்தத்தின்கென்று என்ன அழைத்த தேவனே, ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளவும், மனதிலே மாசம்சத்தின் எண்ணங்களுக்கு இடம் கொடாதிருக்கவும், எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்தருள் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | ஆகஸ்ட் 11

📖 மாலை வாசகம் – சங்கீதம் 1:1 – 6

# இருதயத்தின் நிறைவு

தேவனாகிய கர்த்தர்தாதே தாம் தெரிந்து கொண்ட ஜனங்களை நோக்கி: "நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்து மாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து, அவை களை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கா ர்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர் களாக. அவைகளை உங்கள் வீட்டு நிலைகளிலும் உங்கள் வாசல்க ளிலும் எழுதுவீர்களாக." என்றார். இதன்கருப்பொருள் என்ன? தேவ னுடைய பிள்ளைகள் எப்பொழு தும், எவ்வேளையும், தேவனு டைய வசனத்தைக் குறித்து எண்ணமுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஒரு விசுவாசியின் சிந்தனையிலே, கர்த்தருடைய வேதமே, இரவும் பகலும் தியானமாயிருக்க வேண்டும். "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்." என்ற பிரகாரமாக, இருதயமானது தேவ வார்த்தையினாலே நிறைந் திருக்கும் போது, அவைகளே, அவனுடைய இன்ப நாட்களிலும், துன்ப நாட்களிலும் அவன் வாயிலிருந்து புறப்படும். மனுஷனுடைய மன மானது, இல்லாத ஒரு காரியத்தை ரூபிக்கக்கூடிய ஆற்றல் உள்ளது. ஒரு அற்பமான காரியத்தை சிந்தித்து, அதை மிக பெரிய பாதகமான காரியமாக விபரிக்கக்கூடியது. நன்மையானதும், தீமையானதும் அங்கே உருவேற்றப்படுகின்றது. ஒருவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும், இன்னொருவனுக்கு கெடுதி செய்ய வேண்டும் என்பதும், முதலில் அங்கேயே நிர்ணயம் செய்யப்படுகின்றது. சிலர், சிந்தித்து, திட்டமிட்டு, தீமை செய்ய சந்தர்ப்பத்திற்காக காத்திருப்பார்கள். அதுபோலவே, தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளின்படி செய்கின்ற மனுஷன் நன்மையானதை நடப்பிக்கும்படி தன் இருதயத்தை ஆயத்தப்படுத்திக் கொள்கின்றான். தேவனுடைய வார்த்தை விளையும் பண்படுத்தப்பட்ட நல்ல நிலமாகிய இருதயமானது நற்பலனைக் கொடுக்கும். எனவே, நீங்கள் தனித்திருக்கும் வேளைகளிலும், படுக்கையிலும், தேவனுக் கு ஏற்புடையவைகளையே சிந்தியுங்கள்.

**சங்கீதம் 63:6**

என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்.

**ஜெபம்:** பரலோக தேவனே, வீணான காரியங்களை நான் என் இருதய த்திலே பதித்து வைக்காமலும், பூமிக்குரியவைகளை சிந்தியாமலும், உம்முடைய வார்த்தை தங்கும் பண்பட்ட நிலம்போல இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | ஆகஸ்ட் 12 | 📖 மாலை வாசகம் – பிலிப்பியர் 4:9

# கிறிஸ்துவின் மாதிரி

மேலான அழைப்பை பெற்ற அருமையான விசுவாசிகளே, நிலையான நகரம் நமக்கு இங்கில்லை. வரப்போகின்ற நித்திய பரம தேசத்தை நாடி ஓடிக் கொண்டிருக்கின்றோம். இந்த ஓட்டத்திலே, தேவனாகிய கர்த்தர் தாமே நம்மை தனித்திருக விடவில்லை. தம்முடைய சத்திய ஆவியானவரை தம்முடையவர்களுக்கு ஈவாக கொடுத்திருக்கின்றார். அந்த சத்திய ஆவியானவர்தாமே, விசுவாசிகளை சகல சத்தியத்தி லும் நடத்திச் செல்ல ஆயத்தமு ள்ளவராக இருக்கின்றார். அதுமட் டுமல்லாமல், மேகம் போன்ற திர ளான சாட்சிகள் விசுவாசிகளை சூழ்ந்திருக்கின்றார்கள். அவர்கள் இன்னார் என்பதை நிதானித்து அறிய சத்திய ஆவியானவர் வழி நடத்து கின்றார். வேதத்திலே காணும் பரிசுத்தவான்கள் நமக்கு முன்பாக ஓடி, கிறிஸ்து உலகத்தை ஜெயித்தது போல, கிறிஸ்துவுக்குள் அவர்களும் இந்த உலகத்தை ஜெயித்திருக்கின்றார்கள். அன்றுமட்டு மல்ல, இன்றும், சத்திய வழியிலே நடந்து, தேவ சித்தத்தை தங்கள் வாழ்வில் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் யாவரும் யாவற்றையும், எந்த தவறும் இல்லாமல், சம்பூரண மாக நிறைவேற்றி முடியத்தார்கள் என்பது கருப்பொருள் அல்ல. மாறாக, அவர்கள் தாங்கள் தவறிப்போன இடங்களையும், சந்தர்பங்க ளையும் உணர்ந்து, மனம்வருந்தி, மனம்திரும்பி, முன்னோக்கி சென் றார்கள். விசுவாசிகள் எதிர்நோக்ககூடிய பாடுகளையும், சவால்களையும் அனுபவரீதியாக அறிந்து, அவைகளை குறித்த முன்னெச்சரிப்பை எழு த்தி வைத்துள்ளார்கள். தாங்கள் கிறிஸ்துவினிடத்தின் பெற்றுக் கொண் டதைக் குறித்து விளக்கமாக கூறியிக்கின்றார்கள். அந்த வரிசையிலே, தேவ ஊழியராகிய பவுல், பிலிப்பிய சபையிலுள்ள விசுவாசிகளுக்கும், தன்னுடைய அனுபவ சாட்சியின் வழியிலே நடக்கும்படி அவர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கின்றார். அந்த மாதிரியை நாமும் இந்நாட்க ளிலே பின்பற்றிச் செல்ல வேண்டும். அவர் பின்பற்றிய மாதிரி, கிறிஸ்து இயேசுவே. அவர் கொண்டிருந்த சிந்தை கிறிஸ்துவின் சிந்தையே. அவ்வண்ணமாகவே, என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்களென்று கொரி ந்துவிலுள்ள சபையோருக்கும் புத்திமதி கூறியிருக்கின்றார். கிறிஸ் துவை ஆதயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, தன்னிடத்திலிருந்த உலக மேன்மைகளை குப்பை என்றும் நஷ்டம் என்றும் தள்ளிவிட்டார். அது போலலே நாமும் கிறிஸ்துவை பற்றிக் கொள்வோமாக.

**1 கொரிந்தியர் 11:1**

**நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்க ளாயிருங்கள்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, உம்மை உறுதியாக பற்றிக்கொண்டு, எனக்கு முன்பாக ஓடி, இந்த உலக்தை ஜெயித்த உம்முடைய தாசர்களைளின் வழியை அறிந்துணர எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வியாழன் | ஆகஸ்ட் 13 | 📖 மாலை வாசகம் – மத்தேயு 5:13–15

# கிறிஸ்து வெளிப்பட வேண்டும்

தேவ ஊழியராகிய பவுல், தான் எப்படியாக கிறிஸ்துவை அறிந்து, அவரை பின்பற்றியது போல, விசுவாசிகள் யாவரும், அவ்வண்ண மாகவே கிறிஸ்துவை பின்பற்றும்படி கூறியதைபற்றி தியானித்து வருகி ன்றோம். 1வது: ஊழியருடைய வாழ்க்கையிலிருந்து விசுவாசிகள் தேவ காரியங்களை கற்று கொண்டார்கள். 2வது: அவரிடத்திலிருந்து விசுவாசிகள் தேவ காரியங் களை பெற்றுக் கொண்டார் கள். 3வது: அவரிடத்திலிருந்து தேவ காரியங்களை கேட்டு அறிந்தார்கள். 4வது: அவரு டைய வாழ்க்கையின் சாட்சி வழியாக கிறிஸ்து இயேசு பின்பற்றும் அடிச்சுவடுகளை கண்டு கொண்டார்கள். பிலிப்பிருக்கு எழுதிய நிருபத்திலேயே, அவர் தன்னுடைய சிந்தையிலிருக்கும் காரியங்கள் ஒரு சிலவற்றை கூறியி ருக்கின்றார். அவற்றுள்: உபத்திரவத்திலும் கிறிஸ்துவுக்குள் சந்தோஷ மாய் இருப்பது. மற்றவர்களுக்கு ஆறுதலாக இருப்பது. இலக்கை நோக்கி செல்வது. கிறிஸ்துவுக்காக எதையும் விட்டுவிட ஆயத்தம் போன்றவற்றை குறித்தும் கூறியிருக்கின்றார். இந்நாட்களிலே, விசுவாசி களும், கிறிஸ்துவின் சிந்தையை தரித்துக் கொள்ளும் பாதையிலே, மேலே கூறப்பட்ட நான்கு காரியங்களை பின்பற்றுவதோடு நின்றுவி டாமல், விசுவாசிகளும், தேவ ஊழியராகிய பவுலை போல, "நான் கிறிஸ்துவை பின்பற்றுவது போல நீங்களும் பின்பற்றுங்கள்" என்று மற்றவர்களுக்கு கூறும்படி, வாழ்க்கையானது மறுரூபமடைய வேண்டும். ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலிருந்தும், கிறிஸ்துவுக்குரியவை களை மற்றவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். விசுவாசிகளிடமிருந்து கிறிஸ்துவின் காரியங்களை மற்றவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் சத்தியத்தை சுத்தமாக பேசுவதை கேட்க வேண்டும். பிரதானமாக, மற்றவர்கள் கிறிஸ்துவை உங்களில் காண வேண்டும். "இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித் தார்." உலகத்திலுள்ளவர்கள் விசுவாசிகளின் வாழ்க்கையில் நற்கிரியை களைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற பரம பிதாவை மகிமைப் படுத்தும்படி, அவர்களுக்குள் பிரகாசிக்கப்பட்ட வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கவேண்டும்.

**பிலிப்பியர் 4:9**

**நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்;**

**ஜெபம்:** பரலோகத்திலிருக்கின்ற பிதாவாகிய என் தேவனே, எனக்குள் பிரகாசிக்கப்பட்ட தேவ ஒளியை என் பேச்சிலும் நடத்தையிலும் மற்றவர் கள் காணும்படி நீர் என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வெள்ளி | ஆகஸ்ட் 14 | 📖 மாலை வாசகம் – 2 கொரி 11:24 – 27

# சமானதானத்தில் நிலைத்திருக்கும் வாழ்வு

“நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார் எனக்கு மாத்திர மல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்த ருளுவார்.” என்ற நிச்சயம் தேவ ஊழியராகிய பவுலுடைய வாழ்க்கையிலே இருந்தது. அவர் எவ்விதமாக கர்த்தரின் பிரசன்னமாகுதலை வாஞ்சித்து, தான் பிடிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுபடி, பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி ஓடினார். தன்னுடைய ஊழியத்தின் பதையில், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தபோதும், அவர் இலக்கின்மேல் கண்வைத்து முன்னேறிச் சென்றார். இன்று நம்முடைய வாழ்விலே வெவ்வேறான பாடுகள் உண்டாயிருக்கலாம். ஆனால், தன்னை கிறிஸ்துவையுடையவன் என்று சொல்லிக் கொள்கின்ற ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும், கிறிஸ்துவை பிரதிபலிக்கின்றதாக காணப்பட வேண்டும். அவனுடைய சிந்தனையும், சொல்லும், செயலும் தேவனுடைய சமுகத்திலே ஏற்புடையதாக காணப்பட வேண்டும். இது வாழ்க்கையிலே ஒரு நாள் அல்லது வருடத்தில் ஒருமுறை நடப்பதல்ல, ஒவ்வொரு நாளும், எல்லா சந்தர்பங்களிலும் கிறிஸ்துவின் சாயலிலே விருத்தியாகும் தன்மை காணப்பட வேண்டும். கிறிஸ்துவின் சாயலிலே வளருகின்றவன், பிதாவாகிய தேவனோடுள்ள ஐக்கியத்திலே நிலைத்திருக்கின்றான். அப்படியாக அந்த ஐக்கியத்திலே நிலைத்திருக்கின்றவன், அவருடைய சமாதானத்தில் நிலைத்திருக்கின்றான். இந்த உலகத்திலே அவனுக்கு உபத்திரவங்கள் வந்தாலும், உலகத்தை ஜெயித்த கிறிஸ்து அவனோடு இருப்பதினால், அவன் கலகக்கமடையவதில்லை, சோர்ந்து போவதில்லை. கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு எந்தக் காரியமும் பிரிக்கமாட்டாதென்று நிச்சயம் அவனுக்குள் காணப்படும்.

**ரோமர் 8:39**

**உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.**

**ஜெபம்:** என்னை அழைத்த தேவனாகிய கர்த்தாவே, இந்த பூலக வாழ்க்கையிலே எவ்விதமான சூழ்நிலைகள் ஏற்பட்டாலும், நான் மனம் தளர்ந்து போகாமல், உறுதியாய் உம் வார்த்தையை பற்றிக் கொண்டு வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# குறைவிலே உதவி செய்யும் சுபாவம்

பிலிப்பிய நிருபத்தின் ஆரம்பத்திலே தேவ ஊழியக்காரனாகிய பவுல், பிலிப்பிய சபையோரின் உதாரத்துவமாக கொடுக்கும் அவர்களுடைய சுபாவத்தை குறித்து, பாராட்டி, அதற்கு நன்றியை தெரிவித்தார். அத்தகைய நல்ல சுபாவம் அவர்கள் மத்தியிலே காணப்பட்ட போதும், அவர்கள் தங்கள் அழைப்பின் நோக்கத்தை மறந்து, வேறு சிந்தையை தரித்துக் கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்கயாக இருக்கும்படிக்கு அவர்களுக்கு ஆலோசனையை வழங்கியிருக்கின்றார். முதலாவதாக, தேவ ஊழியராகிய பவுலுக்கு ஏற்பட்ட சூழ்நிலை நமக்கு ஏற்பட்டால், நாம் அவரைப்போல விசுவாசத்திலே நிலைத்திருக்க வேண்டும். இரண்டாவதாக, தேவ பிள்ளைகள் கஷ்டங்களை எதிர்நோ க்கும் போது, நாமும், பிலிப்பிய சபையோரைப் போல, அவர்களுடைய தேவைகளிலே உதவி செய்கின்றவர்களாக காணப்பட வேண்டும். அந்நாட்களிலே, தேவ ஊழியராகிய பவுல், கிறிஸ்துவின் சுவிஷேசத் தினிமித்தம் சிறைக் கைதியாக ரோமாபுரியிலே இருந்ததால், உடன் சகோதரரில் அநேகர், சிறைக் கைதியோடு ஐக்கியமாக இருப்பது அவர்களுக்கு அவமானம் என்று கருதி, அவரைவிட்டு விலகிப்போனார்கள். அதனால், தேவ ஊழியர் மனம் தளர்ந்து போகவில்லை. தன் இலக்கை மறந்து போகவில்ரலை. தன்னை அழைத்த தேவன் இன்னார் என்பதையும், அவரே தன்னை விசாரிக்கின்றவர் என்பதிலே மிகவும் உறுதியாய் இருந்தார். அதாவது, தேவ தயவானது, விசுவாசிகள் வழியாகவோ, அவர் கையிட்டு செய்யும் வேலை வழியாகவோ, அல்லது வேறு வழியாகவோ உண்டாகலாம். ஆனால் செய்கையையும் விருப்பத்தையும் கர்த்தரே உண்டு பண்ணுகின்றார் என்பதை திட்டமாக அறிந்திருந்தார். அவருடைய இக்கட்டான சூழ்நிலையிலே, பிலிப்பிய சபையோர் அவருக்கு உதவும்படி மனம் மலர்ந்தார்கள். அந்தப்படியே நாமும் உதவி செய்கின்றவர்களாகவும், அதே வேளையிலே, நம்முடைய அழைப்பின் பிரதானமாக நோக்கத்தை மறந்து போகாமல், உலகத்தின் மேன்மைகளிலே இழுப்புண்டு போகாமல், மேலான இலக்கின்மேல் கண்களை பதியவைத்தவர்களாக, கிறிஸ்துவிலிருந்து சிந்தையோடு, பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த அழைப்பின் பந்தையப் பொருளை நோக்கி முன்னேறிச் செல்கின்றவர்களாக காணப்பட வேண்டும்.

**பிலிப்பியர் 4:10**

**என்னை விசாரிப்பதற்கு நீங்கள் இப்பொழுது மறுபடியும் மனமலர்ந்தபடியினாலே கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்பட்டேன்**

**ஜெபம்:** என் தேவைகளை சந்திக்கும் தேவனே, என் இக்கட்டான சூழ்நிலையில் நான் உம்மை பற்றிக் கொள்ளவும், மற்றவர்களுடைய குறைவிலே உதவி செய்யவும் எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விழிப்புள்ள விசுவாசிகளாயிருங்கள்

> **1 கொரிந்தியர் 16:13**
>
> **விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்.**

"மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்." என்று தேவ ஊழியராகிய பவுல் தீமோத்தேயு என்னும் ஊழியனுக்கு எச்சரித்திருப்பதை 2 தீமோத்தேயு 3ம் அதிகாரத்திலே வாசிக்கலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே, கடைசி நாட்களை குறித்து கூறும் போது: "அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள். அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்." என்று கூறியிருக்கின்றார். அந்த அநேகருக்குள்ளே நாம் அகப்படாதபடிக்கு, நாம் விசுவாசத்திலே உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும். தேவ ஊழியராகிய பவுல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் நிமித்தம் சிறைப்படுத்தப்பட்ட போது, சில சகோதரர்கள் அவரை கைவிட்டுவிட்டார்கள் என்று குறிப்பிட்டிருக்கின்றார். அதுமட்டுமல்லாமல், விசுவாசிகள் என்று தங்களை கூறிக் கொண்ட சிலர், அவரைப் பகைத்தார்கள். தேவ அன்பு அவர்களிடத்தில் அற்றுப் போயிற்று. இன்றும் சிலர் ஞானமாய் வாழ வேண்டும் என்பதை தங்கள் இச்சைகளுக்கு மூடலாக பயன்படுத்திக் கொள்கின்றார்கள். நாம் சர்பங்களைப் போல வினாவுள்ளவர்களாக மாத்திரம் அல்ல, புறாக்களைப் போல கபடற்றவர்களாகவும் காணப்பட வேண்டும். இருதயத்தில் கபடுள்ளவர்கள், ஞானமாக வாழ வேண்டும் என்பதை தங்களுக்கு ஆதயமாக பயன்படுத்திக் கொள்கின்றார்கள். நீங்களோ, உங்கள் இருதயங்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் உண்மையுள்ள தாய் காத்துக் கொள்ளுங்கள். விசுவாச வாழ்விலே உறுதியுள்ளவர் களாக இருங்கள.

**ஜெபம்**: பரலோக தேவனே, என் சுயபெலத்திலே சாய்ந்து வாழ்வின் தீர்மானங்களை என் இஷ்டபடி எடுத்துக் கொள்ளாதபடிக்கு, எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து உம் வார்த்தையிலே நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உண்மையுள்ள ஊழியர்கள்

கள்ளப் போதகர்கள் மத்தியிலே பொதுவாக காணப்படும் ஒரு சில குணாதிசயங்கள். இவர்களுடைய உபதேசங்கள் அதிகமதிமாக இந்தப் பூமிக்குரியவைகளாக இருக்கும். பூலோகத்திலே ஐசுவரியம், பூலோக த்திலே சம்பூரண சரீர சுகம் என்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்வா ர்கள். “தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பா ர்கள். பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்பு ண்டு, எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண் பிள்ளைகளுடைய வீடுகளில் இப் படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக்கொள்ளுகின்றார் கள்”. இவர்கள் கனிகள் வெளிப்படும்போது, இவர்கள் பொருளாசையும், மோக பாவ இச்சையும், மதுபான வெறிகொள்ளுதல் போன்றவை வெளிப்படும். தேவ ஊழியராகிய பவுல், கொலோசேயருக்கு எழுதின நிருபத்தின் 3ம் அதிகாரத்தில்: நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண் டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத் திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம் முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோ டேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள். ஆகையால், விபசாரம், அசு த்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங் களை அழித்துப்போடுங்கள்.” என்று கூறியிருக்கின்றார். கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதர சகோதரிகளே, நீங்கள் கள்ளப் போதகர்களிடம் அகப்பட்டு, வாழ்விலே பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தால், அந்த அனுப வத்தினாலே, கிறிஸ்து இயேசுவினால், அழைக்கப்பட்டு, உண்மையாய் ஊழியம் செய்கின்றவர்களை மறந்து போய்விடாதிருங்கள். பிலிப்பிய சபையிலுள்ள விசுவாசிகள் மத்தியிலே பல பிரச்சனைகள் இருந்த போதும், அவர்கள் பவுல் உண்மையான இயேசு கிறிஸ்துவினுடைய ஊழியக்காரன் என்று அறிந்திருந்தார்கள். அதுபோலவே நீங்களும் இருக்கும்படிக்கு, வேத வார்த்தைகளை அறிந்து கொள்ளுங்கள். இர வும் பகலும் அவைகளை தியானியுங்கள். சத்திய ஆவியானவருக்கு இடம் கொடுக்கும் போது, அவர் உங்களை உண்மையுள்ளவர்களிடத் தில் வழிநடத்திச் செல்வார்.

**மத்தேயு 6:21**

**உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, உம்முடைய சத்திய வார்த்தைகளை அநுதினமும் தியானித்து, அவைகளை இருதயத்தில் பதித்துவைக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து என் னை வழி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# குறைவுகளை நிறைவாக்குங்கள்

ஒரு கிராமத்திலே வசித்த வந்த குடும்பத்திலே நான்கு சிறு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களுடைய தகப்பனானவர், வெறிகொள்கின்றவனாகவும், தான் உழைப்பதை மதுபானத்திலே அழிக்கின்றவனாகவும், மனைவி பிள்ளைகளைக் குறித்த கவனமற்றவனாகவும் இருந்து வந்தான். அந்த ஊரிலுள்ள குடும்பங்களுக்கு உதவி செய்யும்படி, சில குழுக்கள் அங்கே சென்றிருந்தது. சிலர், மேலே குறிப்பிட்ட குடும்பத்தினரின் நிலைமையை அறிந்து கொண்ட போது, இவர்களுக்கு உதவி செய்தால், அந்த தகப்பனானவர் பணத்தை எடுத்து துஷ் பிரயோகம் செய்து விடுவான் என்று அடுத்த ஊருக்கு சென்று விட்டார்கள். ஆனால், அங்கு வந்திருந்த புற தேசத்து பெண்மணி, அந்த தாயானவளையும், அவளுடைய நான்கு பிள்ளைகளின் நிர்கதியான நிலைமையையும் கண்டு மனதுருகி, அவர்களுக்கு எப்படியாவது உதவி செய்ய வேண்டும் என்று தீர்மானித்து, அதற்குரிய வழிகளை தேடினாள். விசுவாசிகளுடைய மனநிலைமையும், அந்தப் பெண்மணியைப் போலவே இருக்க வேண்டும். அதாவது, உதவி செய்யாமல் இருப்பதற்கு காரணங்கள் தேடாமல், உதவி தேவையான இடங்களிலே, எப்படி உதவி செய்யலாம் என்பதை குறித்த எண்ணமுள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவனாகிய கர்த்தர் உங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை நினைத்துப் பாருங்கள். அவர் காட்டிய இரக்கங்களை எண்ணிப் பாருங்கள். அவர் உங்களுக்கு கொடுத்த எல்லா காரியங்களிலும், நீங்கள் அவருடைய சம்பூரணமான திட்டப்படி நடந்து கொண்டீர்களா என்று ஆராய்ந்து பாருங்கள். மற்றவர்களுடைய உண்மைத் தன்மையை குறித்து நியாயந்தீர்க்க முன்பு, அவரவர் தங்கள் தங்கள் இருதயங்களை வார்த்தையின் வெளிச்சத்திலே ஆராய்ந்து பார்ப்பது நல்லது. “ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.” தேவன் தம்முடையவர்களை போஷிக்க அறிந்திருக்கின்றார். அவர் எலியாவை நோக்கி: அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய் அங்கே உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன் என்றார். அந்நாட்களுக்கு பின்பு, தீர்க்கதரிசியை பாராமரிக்கும்படி சாறிபாத் ஊரிலுள்ள ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார். ஆனால் விசுவாசிகள் தேவனுடைய திட்டத்திற்குள் இணையும் போது, அது அவர்களுக்கு பெரிதான ஆசீர்வாதமாக இருக்கும்.

**எபிரெயர் 13:16**

**அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.**

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, சூழ்நிலைகளின் நிமித்தம் எவரையும் நியாயந்தீர்க்காமல், பரிசுத்தவான்களுடைய குறைவிலே அவர்களை விசாரிக்கும்படி, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | ஆகஸ்ட் 19

📖 மாலை வாசகம் – காலத்தியர் 6:9

# என் அசையாத நம்பிக்கை!

பிலிப்பிய சபையின் விசுவாசிகளின் உதாரத்துவ குணத்தைக் குறித்து தேவ ஊழியராகிய பவுல் அவர்களை பாராட்டினார். அவர்கள் சமயம் கிடைக்கும் போதெல்லாம், உதவி செய்ய ஆயத்தமுள்ள மனதையு டையவர்கள் என்ற அவர் சாட்சி கொடுத்திருக்கின்றார்கள். இது விசுவா சியகளுக்கு இருக்க வேண்டிய தெய்வீக சுபாவம். அதே வேளையிலே, தேவ ஊழியர்கள் எப்படிப்பட்ட மனநிலையுடையவர்களாக இரு க்க வேண்டும் என்பதை குறி த்து, பவுல், இந்த நிருபத்திலே குறிப்பி ட்டிருக்கின்றார். மறுப டியும், பிலிப்பியர் 4ம் அதிகாரத்திலே, பொருளாதார நிலைமையை குறித்த, பார்வை எப்படியிருக்க வேண்டும் என்பதை விளக்கி கூறுகின் றார்கள். பிலிபிய சபையின் விசுவாசிகள் ஊழியர்களை விசாரிக்கி ன்றவர்களாக இருக்கின்றதால், அவர் கிறிஸ்துவுக்கும் மிகவும் சந்தோஷம் அடைந்தார். தன்னுடைய வயிறு நிறைவடைவதனால் அல்ல, மாறாக, அவர்கள் ஆவியின் கனியை தங்கள் வாழ்வில் செய் கைகள் வாயிலாக காண்பித்ததாலும், அவர்கள் தங்களுக்கானவை களை மாத்திரம் சிந்திகாமல், மற்றவர்களுடைய நலனைக் குறித்த எண்ணமுடையவர்களாக இருப்பதினாலும், அவர் சந்தோஷமடைந்தார். இந்த சுபாவமானது, விசுவாசிகளுக்கு மேன்மையான பரலோக ஆசீர் வாதங்களை கொடுக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். எனினும், விசுவாசிகள் தனக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு அவர் ஊழியத்திற்கு தன்னை ஒப்புக் கொடுக்கவுமில்லை, அவர் அப்படியான மனநிலையோடு ஊழியத்தை செய்யவுமில்லை, ஊழிய த்தின் முடிவிலும் அவர் அந்த எண்ணம் கொண்டிருக்கவில்லை. மாறாக, உபகாரத்தை எதிர்பார்த்து ஊழியம் செய்ய வேண்டாம் என் பதை அவர் கிரியைகள் வாயிலாக நடப்பித்து காண்பித்தார். ஊபகார த்தை நாடி கிரியைகளை நடப்பிப்பவர்கள், அவர்கள் விசுவாசிகளாக இருந்தாலும், ஊழியர்களாக இருந்தாலும், அவர்கள் விசுவாச வாழ்க் கையைக் குறித்து தாங்கள் தங்களை வேத வார்த்தைகளின் வெளிச்ச த்திலே ஆராய்ந்து பாரப்பது அவர்களுக்கு நல்லது. விசுவாசிகளும், ஊழியர்களும் கிறிஸ்துவிலிருந்த சிந்தையைத் தரித்துக் கொள்ள வேண்டும். மனிதர்களுக்கு நன்றியறிதலுள்ளவர்களாக இருக்க வேண் டும். ஆனால், அவர்கள் தேவனே தேவைகளை சந்திப்பவர், அவரே என் நல்ல மேய்ப்பன் என்பதில் உண்மையுள்ள மனதுடையவர்களாக இருக்க வேண்டும்.

**சங்கீதம் 23:1**

**கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கி றார்; நான் தாழ்ச்சியடையேன்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, எந்த சூழ்நிலையிலும் நீரே தேவைகளை சந்திக்க வல்லவர் என்பதையும், நீரே வனாந்திரத்திலே உம்முடையவர் களை போஷpப்பவர் என்பதையும் உறுதியாய் அறிக்கை செய்ய பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஒரு நன்மையுங் குறைவுபடாது

சபை ஐக்கியமொன்றிலே ஒரு சகோதரனோ சகோதரியோ எத்தகைய பதவியிலே இருந்தாலும், அவர் சர்வ வல்லமையுள்ள தேவானகிய கர்த்தரை விசுவசித்து வாழ்கின்ற விசுவாசியாக இருப்பார்கள். நான் விசுவாசியல்ல நான் ஊழியன் என்று பதவியடைப்படியிலே தங்களை அறிமுகப்படுத்துபவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் நாம் யாவரும் விசுவாசிகளாக இருக்கின்றோம். பெதுவாகசபையிலே விசுவாசிகள் என்று அழைக்கப்படுகின்றவர்கள், வெளியிடங்களிலே வேலை செய்து உழைக்கின்றார்கள். அவர்களை வேலைக்கமர்த்தியர்வர்கள் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கின்றார்கள். வேலையை உண்டுபண்ணி, அதன் வழியாக பிழைப்பூட்டுகின்றவர் கர்த்தரே. ஒருவேளை வேலை இல்லாமற்போனாலும், கர்த்தரே விசுவாசிகளின் வாழ்வாதரத்திற்கு வழிகளை உண்டு பண்ணுகின்றார். சபையிலே ஊழியர்கள் என்று அழைக்கப்படுகின்றவர்கள், பொவாக சபை வழியாக வாழ்வாதாரத்தை பெற்றுக் கொள்வது நல்ல ஒழுங்காக இருக்கின்றது. ஒருவேளை சபையினால், ஒரு ஊழியன் போஷிக்கப்படாவிட்டால், யார் அந்த ஊழியனை பிழைப்பூட்டுகின்றார்? கர்த்தரே வழிகளை உண்டு பண்ணுகின்றவராக இருக்கின்றார். எனவே, சபையின் விசுவாசி என்று அழைக்கப்பட்டாலும், சபையின் ஊழியன் என்று அழைக்கப்பட்டாலும், நான் விசுவாசித்திலே நிலைத்திருந்து ஜீவனம் பண்ணுகின்றவர்களாக இருக்கின்றோம். தேவ ஊழியராகிய பவுல், “நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள் அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்.” என்ற வசனத்தை கடந்த நாட்களிலே தியானித்தோம். ஊழியர்கள் என்றும், விசுவாசிகள் என்றும் அழைக்கப்படுகின்றவர்கள் சமாதானத்தை இழந்து போய் விட்டோம் என்று கூறும் போது, அவர்கள் கற்றும், அடைந்தும், கேட்டும், கண்டும் இருக்கின்றவைகளை தங்கள் வாழ்விலே செயற்படுத்த தவறிவிடுகின்றார்கள். கர்த்தருடைய வேதமானது, போதிப்பவர்கள் போதிப்பதற்கு மாத்திரமல்ல, அவர்கள் போதகத்தை கைகொள்வதற்கும் அருளப்பட்டிருக்கின்றது. “சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.”

> **சங்கீதம் 34:10**
>
> **சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒருநன்மையுங் குறைவுபடாது.**

**ஜெபம்:** பரலோக தேவனே, என் வாழ்க்கையிலட குறைவுகள் ஏற்படும் போது, முறுமுறுக்காமல், உம்முடைய வார்த்தையை நம்பி, அவைகளை அறிக்கையிட்டு, உம்முடைய நேரத்திற்கு காத்திருக்க எனக்கு பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வெள்ளி | ஆகஸ்ட் 21

📖 மாலை வாசகம் – சங்கீதம் 37:5

# கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும்

இந்நாட்களிலே, சில இடங்களிலே, சபை அங்கத்தவர்கள், நிர்வாகம் என்ற போர்வையிலே, சபை ஊழியரை ஒடுக்குவதும், வேறு சில இட ங்களிலே, தன்னாதிக்கம் உள்ள சில ஊழியர்கள், விசுவாசிகள் மேல் அதிக அழுத்தத்தை செலுத்துவதையும், ஆங்காங்கே காணக்கூடியதாக இருக்கின்றது. பொதுவாக, பொருளாதாரமே இந்த அழுத்தங்களுக்கு காரணமாக இருக்கின்றது. இரண்டு பகுதியினரும், தங்களுடைய அழை ப்பின் பிரதானமான நோக்கத்தையும், அழைத்தவர் இன்னார் என்பதையும், அவரே நம்மை விசாரிக்கின்றவர் என் பதையும் மறந்து போய்விடக்கூடாது. கொடுக்கப்பட்ட பதவிகள், பொறுப் புக்களை நல்ல உக்கிரணக்காரனைப் போல பயன்படுத்த வேண்டும். முதலாதவதாக, விசுவாசிகளே: உங் களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்க த்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களு க்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள் அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே. (எபி ரெயர் 13:17). அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப் பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களு டைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக் கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள். (1தெச 5:12-13). அதே வேளையில் ஊழியர்களே: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட் டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்க ளாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும் போது மகிமை யுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். (1 பேதுரு 5:2-4). கர்த்தரே யாவரையும் விசாரிக்கின்றவர் என்பதையும், அவருக்கே நாம் யாவரும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதையும் நீங்கள் மறந்து போய் விடாதிருங்கள். எனவே, அவரை நம்பி, அவருடைய வார் த்தையிலே நிலைத்திருந்து, அவருடைய வேளைக்காக காத்திருங்கள். தேவ சித்தம் நிறைவேற இடங் கொடுங்கள்.

**சங்கீதம் 62:5**

**என் ஆத்துமாவே, தேவ னையே நோக்கி அமர்ந் திரு; நான் நம்புகிறது அவ ராலே வரும்.**

**ஜெபம்:** என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமு மான தேவனே, உம்மை நம்பி உம்முடைய வார்த்தையிலே நிலைத்தி ருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததி

வாழ்வின் சமநிலைப் பிரமாணத்தைக் குறித்தும், மனப்பூர்வமான தான தர்மங்களைக்குறித்தும், தேவ ஊழியராகிய பவுல், கொரிந்து சபைக்கு எழுதிய 2ம் நிருபத்தின், 8ம் 9ம் வசனங்களிலே விரிவாக காணலாம். நாளைய வாழ்வின் நிலையைக் குறித்து நிச்சயமில்லாத இந்த உலகத்திலே, விசுவாசிகள், பிழைப்பூட்டுகின்ற பிதாவாகிய தேவனை நம்பி, அவருடைய வார்த்தையின்படி வாழ்வதே அவனுக்கு நலம். இன்று ஒரு வேளை பெற்றோர் செழிப்புள்ளவர்களாக காணப்படலாம். அது தேவனுடைய ஆசீர்வாதம் என்று கூறிக் கொள் ளலாம். ஆனால், எதிர்காலத்திலே பிள்ளைகளுடைய நிலைமை என்ன? கர்த்தர் வர தாமதமானால், இன்னும் வரவிருக்கும் சந்ததியினருடைய நிலைமை என்ன? யார் அதை உறுதி செய்ய முடியும்? எனவே, இப்போதிருக்கின்ற காலத்திலே, தேவ வார்த்தையின்படி உங்கள் முதலீடுகளை செய்யுங்கள்! கர்த்தர் வழி நடத்துகின்ற பிரகாரமாக, ஊழியங்களை தாங்குங்கள். தேவ ஊழியங்களை தாங்க வேண்டும் என்னும் உண்மையான மனநிலை உண்டாயிருக்கும் போது, கர்த்தர் உங்களை நிச்சயமாக சரியான இடத்திற்கு வழிநடத்துவார். கோணலும் மாறுபாடுமான உலகத்தால் கறைபடாதபடிக்குத் தேவ வார்த்தையின்படி உங்களை காத்துக் கொண்டு, திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரியுங்கள். இப்போது உண்டாயிருக்கும் பொளாதாரத்திலே நம்பி கிரியைகளை நடப்பிக்காமல், காலங்களை அறிந்த சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரை சார்ந்து வாழ்பவன், ஞானமுள்ள பிள்ளையாக இருக்கின்றான். தேவ ஊழியராகிய பவுல், கொரிந்து சபையோருக்கு கூறியது போல, “மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்தமும் உண்டாகும்படியல்ல, சமநிலையிருக்கும்படியாகவே சொல்லுகிறேன். எப்படியெனில், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிறபிரகாரம், சமநிலைப் பிரமாணத்தின்படியே, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக.” “கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.”

**2 கொரிந்தியர் 8:11**

**கொடுக்கவேண்டும் என்கிற விருப்பமுண்டாயிருந்ததுபோல, உங்களுக்கு உள்ளவைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக.**

**ஜெபம்**: இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, இரங்கிக் கடன்கொடுத்து, தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற பாக்கியமுள்ள மனுஷனைப் போல வாழ உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அழைத்த தேவன் உண்மையுள்ளவர்

ஒரு தேசத்திலே வாழ்ந்து பல குடும்பங்கள், அந்த தேசத்தில் ஏற்பட்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்டார்கள். தேசத்திலே பொருளாதரம் வீழ்ச்சி ஏற்பட்டதால், வேலையில்லா பிரச்சகைகள் அதிகமாயிற்று. வெளியே சென்று வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. சிலர் தங்கள் சொந்த வீடுகளைவிட்டு இடம் பெயர்ந்து செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள். வாழ்விலே பல நெருக்கங்களும், அசௌகரியங்களும் ஏற்பட்டிருந்தது. அவர்கள் கர்த்தரை அறியாதவர்களாக இருந்த போதும், அவர்களில் சிலர், வாழ்க்கையைக் குறித்து முறுமுறுப்பதைப் பார்க்கிலும், அந்த தேசத்தின் நிலைமைக்கு தங்களை பயிற்சிவித்துக் கொண்டார்கள். அவர்கள் ஏதோ ஒரு விதத்திலே போஷிக்கப்பட்டார்கள். இருக்கின்ற இடங்களிலே, பிள்ளைகளுக்கு கல்வி கற்றுக் கொடுத்தார்கள். அவர்கள் சூழ்நிலைகளை எப்படி தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதில் கருத்துள்ளவர்களாக இருந்தார்கள். கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதர சகோதரிகளே, இந்த உலகத்திலுள்ளவர்கள் கடினமான சூழ்நிலைகளிலே முறுமுறுக்காமல், காலத்தை ஆதயப்படுத்திக் கொள்கின்றார்கள். காரியம் அப்படியானால், கடினமான சூழ்நிலைகளில், தேவ பிள்ளைகள் எவ்வளவு அதிகமாக தெய்வீக பண்புகளை வெளிக்காட்ட வேண்டும்? அக்காலத்திலே, தேவ ஜனங்கள் வனாந்திர வழியாக வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு சென்று கொண்டிருக்கும் போது, தேவனாகிய கர்த்தர் அவர்களோடு இருந்து, அவர்களுடைய தேவைகளை சந்தித்து வந்தார். அவரே அவர்களுக்கு பாதுகாப்பாக இருந்தார். எனினும், அநேகர் அவரை பரீட்சை பார்த்தார்கள். முறுமுறுக்கின்றவர்களாக மாறிப்போனார்கள். அதனால், அவர்களில் அநேகரின் யாத்திரை வனாந்திரத்தோடு முடிவடைந்துவிட்டது. நாங்கள் அப்பயிராமல், எல்லா சமயங்களிலும் கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் எங்களை விசாரிக்கின்றவர் வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவன். அவர் வார்த்தையில் உண்மையுள்ளவர். அவர் சொன்னத்தை செய்து முடிப்பவர். “நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன் நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய் அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது.” என்று தம்முடையவர்களுக்கு வாக்குரைத்திருக்கின்றார்.

**ஏசாயா 43:1**

**பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்.**

**ஜெபம்:** என்னை பெயர் சொல்லி அழைத்த, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, எந்த சூழ்நிலையிலும் நீர் என்னோடிருக்கின்றீர் என்பதை உணர்ந்து செயறபட கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சோர்ந்து போக வல்ல கரியை

தேவ ஊழியராகிய பவுல், பிலிப்பிய சபையோருக்கு எழுதும் போது, அவர்களுடைய உதாரத்துவத்தை குறித்து பாராட்டினார். எனிலும், கிறிஸ்துவின் நற்செய்தியின் நிமித்தம், அவர் யாரிடம் இருந்தும் எந்த உதவிகள் இன்றி, உபத்திரவங்களை சகித்த சந்தர்பங்கள் பல உண்டு. அதைக் குறித்து அவர் கொரிந்து சபையோருக்கு கூறும் போது: "நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன். மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன் ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும் பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்." என்று கூறியிருக்கின்றார். அவர் இவைகளை குறித்து மேன்மை பாராட்டவில்லை. இவைகளை சாட்சியாக கூறி, தனக்கு பொருளாதார ஆதயம் உண்டாகும்படி, யாரிடும் கோரிக்கைவிடவில்லை. அவர் உபகாரத்தை நாடவில்லை. மாறாக, தன் வாழ்வில் ஏற்பட்ட குறைவிலும், நிறைவிலும், உயர்விலும், தாழ்விலும் கிறிஸ்துவுக்குள் மனரம்யமாயிருக்க கற்றுக் கொண்டார். இன்று விசுவாசிகள் மற்றும் ஊழியர்கள் தங்கள் வாழ்விலே எதைக் குறித்து முறுமுறுக்கின்றார்கள்? எதைக் குறித்து நொந்து கொள்கின்றார்கள்? தங்கள் வாழ்விலே குறைவுகள் ஏற்படும் போது, தங்களுக்கு ஏற்படும் மனஅழுத்தங்கள் யார்மேல் காண்பிக்கின்றார்கள்? தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.

**பிலிப்பியர் 4:11**

**என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக்கற்றுக்கொண்டேன்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, எல்லா சூழ்நிலைகளிலும், உபத்திவத்திலும், பாடுகளிலும், மனிதர்கள் உண்டாகும் வசைச் சொற்களிலும், நான் சோர்ந்து போகாமல் அழைப்பின் நோக்கத்தை நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# போதுமென்கிற மனம்

அன்றும் இன்றும் தேவனால் உண்டான ஆத்தும இரட்சிப்பையும், கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்க்கையையும், உலகத்தின் போக்கின்படி அளவிடுகின்றார்கள். ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பதற்கு இந்த உலக கல்வி, செல்வம், அந்தஸ்து சார்ந்த விளக்கங்களை கொடுத்து வருகின்றார்கள். இவைகள் எல்லாம், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை அறியாதவர்களிடத்தில் இன்னமும் தாரளமாக இருக்கின்றது. இவைகள் உங்களுக்கு உண்டாகி பெருகினால், அவை தேவனால் உங்களுக்கு உண்டானது என்பதை நீங்கள் உறுதி செய்து கொண்டு, அதன் வழியாக பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுங்கள். உங்கள் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக் கொள்ளாதபடிக்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். தேவ ஊழியராகிய பவுல், இந்தக் காரியங்களைக்குறித்து பிலிப்பியருக்கு எழுதியிருப்பதை நாங்கள் இந்த வருட ஆரம்பத்திலிருந்து தியானித்து வருகின்றோம். கருப்பொருளாவது, நம்முடைய கண்கள் இலக்கை நோக்கி இருக்க வேண்டும். கண்கள் இலக்கை நோக்கி இருப்பதற்கு, நித்திய ஜீவனானது இருதயத்தின் பொக்கிஷமாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் அறிவை அறியும் மேன்மைக்காக இந்த உலகத்திலுள்ளவைகள் எவைகளை விட்டுவிட நேர்ந்தாலும், அவைகளை விட்டுவிடும் மனதையுடையவர்களாக இருக்க வேண்டும். “போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களைஉருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு என்று தீமோத்தேயு என்னும் ஊழியருக்கு பவுல் அறிவுரை கூறியிருக்கின்றார். அந்தப்படியயே நாமும், கிறிஸ்துவுக்குள் மனரம்யமுள்ளவர்களாக, பரலோகதிற்குரிய மேலானவைகளை நாடித் தேடுங்கள்.

**1 தீமோத்தேயு 6:6**

**போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.**

**ஜெபம்:** மேலான இலக்கிற்கு என்னை அழைத்த தேவனே, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடவும், நித்தியஜீவனைப் பற்றிக்கொள்ளும் இருதயமுடையவனாகவும் இருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# படிப்படியான வளர்ச்சி

ஒரு குழந்தைக்கு பசி அல்லது எந்தவொரு அசௌகரியமான நிலை ஏற்படும் போது, சத்தமாக அழுது தனது அசௌகரியத்தை வெளிப்படு த்துகின்றது. அந்தக் குழந்தையின் அழுகையைப் பார்த்து பெற்றோர், அதன் தேவையை அறிந்து கொள்கின்றார்கள். அந்த குழந்தை வள ர்ந்து சிறு பிள்ளையாகும் போது, பல அசௌகரியங்களை தன் பெற் றோரிடம் கூறிக் கொள்வதற்கு கற் றுக் கொள்கின்றார்கள். ஆனாலும், அந்தப் பிள்ளையானது கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்களை இன்னும் அநேகமுண்டு என்பதை பெற்றோர் அறிந்திருக்கின்றார்கள். ஒரு சிறுபிள்ளையானது அயலுள்ள மற்றய பிள்ளைகளோடு சேர்ந்து ஓடி விளையாடிக் கொண்டிருந்த வேளையிலே, விளையாட்டிலே ஒரு பிள்ளையானவன் தோல்வியுற்ற போது, அவன் அழ ஆரம்பித்துவிட்டான். ஆனால், அவன் வளர்ந்து வாலிபனாகும் போது, ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை கற்றுக் கொள்கின்றான். இவ்வண்ண மாகவே, ஆவிக்குரிய வளர்ச்சியும் இருக்கின்றது என்பதை ஒவ்வொரு விசுவாசியும் அறிந்து கொள்ள வேண்டும். பொதுவாக, விசுவாசிகள் தாங்கள் முன்னிருந்த நிலைமையை சீக்கிரத்தில் மறந்து, சக விசுவாசி களை நியாயந்தீர்க்க முந்திக் கொள்கின்றார்கள். தேவ ஊழியராகிய பவுலின் வாழ்க்கையிலே அவர் கிறிஸ்துவின் சிந்தையைத் தரித்துக் கொள்வதைக் கற்றுக் கொண்டார் என்பதை பல இடங்களிலே குறிப் பிட்டிருக்கின்றார். அதாவது, அவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையிலே வளர்சியும், மறுரூபமாகுதலும், முதிர்ச்சியும் இருந்தது. இவைகளை குறித்து அவர் கூறும் போது: "எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மிய மாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்." என்று கூறியிருக்கின்றார். நாம் நம்முடைய வாழ்விலே, தவறுகின்ற ஒவ்வொரு வேளையிலும், தேவ இரக்கத்தை வேண்டி பெற்றுக் கொள்கின்றோம். அதுபோலவே, மற்றவர்களுடை வாழ்க்கையிலும், தேவ இரக்கமானது கொடுக்கப்படுகி ன்றது என்பதை மறந்து போய்விடக்கூடாது. நாம் வளர்சியடைவதைப் போலவே, மற்றவர்களும் வளர்சியடையும்படி, தேவனாகிய கர்த்தர் தாமே, நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார்.

**பிலிப்பியர் 4:12**

**தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்;**

**ஜெபம்:** போதித்து நடத்துகின்ற தேவனாகிய கர்த்தாவே, உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படவும், நான் கிறிஸ்துவின் சாயிலே அனுதினமும் பெருகவும், நீர் எனக்கு கற்றுத் தந்து வழிநடத்திச் செல் வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# போதிக்கப்படக் கூடியவர்கள்

“எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மிய மாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.” என்று தேவ ஊழியராகிய பவுல் கூறியதை கடந்த நாளிலே பார்த்தோம். இந்த வசனங்களிலே, குறிப்பாகஇரண்டு காரியங்களை குறித்து ஒவ்வொரு விசுவாசியும் கருத்துள்ளவர்களாகஇருக்க வேண்டும். “கற்றுக் கொண்டேன்”. ஒரு விசுவாசியானவன் சபையிலே, அல்லது ஊழியத்திலே எந்தப் பதவியிலே இருந்தாலும். கற்றுக் கொள்ளும் எண்ணமுடையவனாகவும், போதிக்கப்படகூடியவனுமாக காணப்பட வேண்டும். ஒருவேளை ஒரு ஊழிக்காரன் அநேக வருடங்கள் ஊழியம் செய்திருக்கலாம். ஆனால், அந்த ஊழியனும் தேவனிடத்திலிருந்து கற்றுக் கொள்ளும் மனதுடையவனும், போதிக்கப்பட கூடியவனுமாக காணப்பட வேண்டும். “நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன் உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.” என்று கர்த்தருடைய வசனத்தை சங்கீதம் 32ம் அதிகாரம் 8ம் வசனத்திலே வாசிக்கின்றோம். தேவனாகிய கர்த்தர் எப்படி போதிக்கின்றார்? அவர் யார் வழியாக ஆலோசனைகளை வழங்குகின்றார்? எப்படி கற்றுக் கொடுக்கின்றார். அவர் வேதத்தின் வழியாகவும், சொற்பனங்கள், தரிசனங்கள் வழியாகவும் நேரடியாக தம்முடையவர்களோடு பேசிவது உண்மை. ஆனால், பொதுவாக, பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்படி ஊழியங்களையும், ஊழியர்களையும் ஏற்படுத்தியிருப்பதை எபேசியர் 4ம் அதிகாரத்திலே வாசிக்கின்றோம். எனவே, எனக்கு எல்லாம் தெரியும் என்று எண்ணத்தைவிட்டுவிட்டு, “தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்.” “வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப் போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம்.” என்ற பிரகாரமாய் உங்கள் மனதைக் கடினப்படுத்தாதபடிக்கு, கற்கக்கூடிய கூடிய மனநிலையுடையவர்களாகவும், போதகத்தை அசட்டை பண்ணாதவர்களுமாயிருங்கள் இருங்கள்.

**யாக்கோபு 4:10**

**கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.**

**ஜெபம்:** பரலோகதேவனே, கற்று அறிந்து கொண்டேன், முற்றிலும் தேறினவனானேன் என்ற மனநிலையுடையவனாக இராமல், உமக்கு முன்பாக தாழ்ந்த சிந்தையுள்ளனாய் நடந்து கொள்ள உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ வார்த்தையிலே வளருங்கள்

குறிப்பிட்ட ஞாயிற்றுக் கிழமையன்று, பிரசங்கத்திலே, "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது." என்ற வசனமானது குறிப்பிடப்பட்டிருந்தது. சபையிலிருந்த விசுவாசியொருவன், இந்த வசனத்தை நன்றாக அறிந்திருந்தான். அநேகந்தரம் அவன் இந்த வசனத்தை வாசித்திருந்தான், பல வேதப் படிப்புக்களை ஆண்டுகளாக கேட்டிருந்தான். அதைக் குறித்து அவனும் வேதப்படிப்புக்களை எடுத்திருந்தான். எனினும், அந்த வசனம் குறிப்பான அன்று கூறப்பட்டதால், அந்த வசனத்தை தன் மனதிலே வைத்திருந்தான். அந்தக் கிழமை அவனுடைய வேலையிலே ஒரு சம்பவம் நடந்தது. அதனால் அவன் மிகவும் கோபம் கொண்டான். அவ்வேளையிலே அவன் பெருமையோடு நடந்து, தன் திறமையைக் காட்டி மற்றவர்களை வெட்கப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் உண்டாயிருந்தது. திடீரென, சபையிலே பிரசங்கிக்கப்பட்ட வசனமானது அவனுக்கு ஞாபகம் வந்தது. அதனால் அவன் பொறுமையுள்ளவனாக தன் வாயை திறக்காமல் இருந்தான். நாட்கள் கடந்து சென்ற போது, எல்லார் முன்னிலையிலும், தேவன் அவனை உயர்த்தினார். அவன் அன்று தன் வாயை திறந்திருந்தால், அவன் அவமானமடைதிருப்பான். கருப்பொருளாவது, அந்த விசுவாசி போதிக்கப்படகூடிய மனநிலையுடைவனாக இருந்தான். தேவ ஊழியராகிய பவுல், பிலிப்பியர் 4ம் அதிகாரம் 10ம் 11ம் வசனங்களிலே எல்லாச் சூழ்நிலைகளிலும் மனரம்யமாக இருக்க கற்றுக் கொண்டார் என்று குறிப்பிடப்பட்டது போல, விசுவாசிகள் ஒவ்வொருவரும், போதகத்தை ஏற்றுக் கொண்டு கற்றுக் கொள்கின்றவர்களாக இருக்க வேண்டும். சூழ்நிலைகள் சாதகமாக இருக்கும் போது, மகிழ்சியாகவும், சூழ்நிலைகள் பாதகமாக தோன்றும் போது முறுமுறுக்கின்றவர்களாகவும் இருக்க கூடாது. சூழ்நிலைகள் சாதாமாகவும், செழிப்பாகவும் இருக்கின்ற வேளைகளிலே, நிதானத்தோடு, தேவ சித்தத்தை செய்கின்றவர்களாக காணப்பட வேண்டும். சூழ்நிலைகள் பாதகமாக தோன்றும் போது, விசுவாசத்திலே நிலைத்திருந்து ஜெயிக்கின்றவர்களாகவும், தேவனுடைய சித்தமானால், கிறிஸ்துவுக்காக எதையும் சகிக்க ஆயத்தமுள்ள இருதயமுடையவர்களாகவும் இருக்க வேண்டும். எனவே, விசுவாசிகளாகிய நீங்கள் தேவ வார்த்தையிலே அனுதினமும் வளர்ந்து பெருகும் சிந்தையுள்ளவர்களாக இருங்கள்.

**1 பேதுரு 3:17**

**தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்.**

**ஜெபம்:** கைவிடாத தேவனே, உயர்விலும், தாழ்விலும், சோதனையிலும், வேதனையிலும் நான் உமக்குள் மனமகிழ்சியாக இருக்கும்படி எனக்கு போதித்து நான் நடக்க வேண்டிய வழியை உணரும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கற்றும் கொள்ளும் பதையிலே...

ஒரு சிறு பையனானவன், சைக்கிள் ஓட்டுவதற்கு தனக்கு கற்று தரும்படி தன் தகப்பனானவரிடம் கேட்டுக் கொண்டான். இந்த செய்கை தன் மகனானவனுடைய வளர்சிக்கு ஒரு அறிகுறி என்று சந்தோஷத்தோடு, தகப்பனானவரும், பரபரப்போடு சைக்கிள் ஓட்டுவதற்கு வேண்டிய பயிற்சியை ஆரம்பித்தார். ஆரம்பம் நன்றாக இருந்தது, ஆனால், நாட்கள் கடந்து செல்லும் போது, சிறு பையனானவன், சைக்கிளை ஓட்டுதற்கு மிகவும் கஷ்டப்பட்டான். சில திருப்பங்களிலே பயந்ததினால், விழுந்துவிட்டான். சில இடங்களிலே, கவனக் குறைவினால்,தடுமாறி மரத்தோடு மோதிக் கொண்டான்.அதனால்,மனச் சோர்ந்து, சைக்கிள் ஓட்ட வேண்டும் என்ற ஆர்வம் குறைந்து கொண்டே போயிற்று. ஒரு வகையான வெறுப்பு மனதிலே ஏற்பட்டது. இதுஎனக்கு சரிவராது என்று எண்ணிக் கொண்டான். அவனுடைய தாயானவளோ, அவனுக்கு தயவுடன் அறிவுரை கூறினாள். அவனை பல வழிகளிலே உற்சாகப்படுத்தி வந்தாள். தான் தவறுகள் செய்த இடத்திலே மிகவும் கவனமாக இருந்தான். ஒரு சில கிழமைகளில், சைக்கிளை நிதானமாக ஓட்டுவதற்கு கற்றுக் கொண்டான். நாட்கள் செல்ல செல்ல சைக்கிள் ஓட்டுவதற்கு அவனுக்கு பழக்கமாயிற்று.அதனால், இனி ஒரு விபத்தும் ஏற்படாது என்பது பொருளல்ல. கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதர சகோதரிகளே, மேற்கூறப்பட்டசந்தர்ப்பத்திற்கு ஒத்ததாக, எந்த ஒரு விடயத்தையும் கற்றுக் கொள்வதின் பாதையிலே, தவறுகளும், வெறுப்புக்களும் உண்டாகலாம். விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்க்கையும் அப்படியாக இருக்கின்றது. ஒரு ஆணும் பெண்ணும் திருமண ஒப்பந்தத்திற்குள் தங்களை உட்படுத்தும் போதும் அல்லது ஒரு விசுவாசியானவன், தன்னை முழுநேர ஊழியத்திற்கு ஒப்புக் கொடுக்கும் போதும், அங்கே பரபரப்பும், உற்சாகமும், பாராட்டுதலும், கொண்டாட்டங்களும் இருக்கும். நாட்கள் கடந்து செல்லும் போது, முகங் கொடுக்கும் அனுவங்கள் கடினமாக இருக்கும். அதிலே நின்றுவிடாமல், தடைகளை தாண்டி செல்ல, உற்சாகத்தின் ஆவியானவர் விசுவாசிகளோடு இருக்கின்றார். உயிர்ப்பித்து வழிநடத்தும் வேத வார்த்தைகள் உண்டு. ஊக்குவிக்கும் சகோதர சகோதரிகள் சிலர் எப்போதும் சூழ இருப்பார்கள். எனவே கஷ்டங்கள் மத்தியிலே மனம்தளர்ந்து போகாமல், கற்றுக் கொண்டு முன்னோக்கி செல்லுங்கள்.

**ரோமர் 15:13**

பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக.

**ஜெபம்:** சத்திய வழியிலே நடக்க கற்றுத் தரும் தூய ஆவியை எனக்கு தந்தருளின தேவனே, தடுமாறும் வேளையில், நான் சோர்ந்து பின்னிட்டு போகாமல், கற்றுக் கொண்டு முன்னேற எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சூழ்நிலைகளுக்கு மேற்பட்ட தேவன்...

மேற்கத்தைய நாடொன்றிலே வாழ்ந்து வந்த மனிதனொருவன், ஓய்வு பெறும் நாட்கள் அண்மித்த போது, நல்ல வசதியான, அமைதியான ஊர்ஒன்றிலே மிகுதியான வருடங்களை கழிக்க வேண்டும் என்று ஆசை ப்பட்டான். அப்படியாக, களவு கொள்ளை இல்லாத, புயல், சூறாவளி மிகவும் குறைந்த ஒரு ஊரை தெரிந்து கொண்டு, அங்கே குடியேறி னான். மாதங்கள் கடந்து சென்ற போது, தன்னுடைய தீர்மானத் தைக் குறித்து அவன் சந்தோஷம டைந்தான். அந்த ஊர் வாழ்வ தற்கு ஒரு நல்ல இடமாகவே இரு ந்தது. ஆனால், ஒரு சில வருடங்க ளுக்கு பின்பு, சில சந்தர்பங்க ளிலே, அந்த ஊரிலே பூகம்பம் வரும்மென்பதை அவன் அறிந்த போது, மனம் உடைந்து போனான். நித்திய இளைப்பாறுதலுக்கென்று அழைக்கப்பட்ட அருமையான சகோதர சகோதரிகளே, விசுவாசிகளு டைய ஆவிக்குரிய வாழ்க்கையிலே போராட்டங்கள் ஒன்றின்பின் ஒன் றாக வரும் காலங்கள் உண்டு. அதே வேளையிலே, வாழ்க்கையிலே அமைதி நிலவும் நாட்களும் உண்டு. இவை யாவும் மனுஷர்களுக்கு இந்த பூமியிலே நேரிடுகின்றது. ஆனால், விசுவாசிகள் இன்னமும் இந்த பூமியிலே, அவர்கள் வாழும் நாட்களிலுள்ள உலகத்திலேயே வாழ்கின் றார்கள் என்பதை மறந்து போய்விடக்கூடாது. தாவீது ராஜாவவின் வாழ்க்கையிலே அதிக துன்பங்கள் ஏற்பட்ட வருடங்கள் உண்டு. கர்த்தர் தாமே தாவீது ராஜா சென்ற இடமெல்லாம் வெற்றியை கொடுத்தார். பின்பு, தாவீது ராஜாவின் வாழ்க்கையிலே அமைதியின் நாட்கள் உண டாயிருந்தது. ஆனால், அது நீடிக்கவில்லை. அதுபோலவே, விசுவாசி ளாகிய உங்களுடைய வாழ்க்கையிலே, இந்தப் பூமியிலே நிரந்திர, நித்திய இளைப்பாறுதல், உண்டாகும் என்று எதிர்பார்த்து வாழ்ந்தால், அது உங்களுக்கு பெரிதான ஏமாற்றத்தை உண்டு பண்ணும். ஆனால், கற்றுக் கொடுக்கின்ற ஆவியானவர்தாமே, விசுவாசிகள் எல்லா சூழ்நி லைகளிலும் மன அமைதலோடு வாழ கற்றுக் கொடுக்கின்றவராக இருக்கின்றார். சூழ்நிலைகளினால் தளர்ந்து போகாமல் இருக்க கற்றுக் கொள்வதே பெரிதான பெலமாக இருக்கின்றது. எனவே, இந்த பூமி யிலே எப்போதும் அமைதியான சூழ்நிலைகள் உள்ள இடங்கள் உண்டு என்றுகருதி,அதை நோக்கி ஓடாமல், உயர்விலும், தாழ்விலும், வேதனை யிலும், சோதனையிலும் உலகத்தை ஜெயித்த கிறிஸ்துவுக்குள் மனரம் யமாக இருக்க கற்றுக் கொள்ளுங்கள்.

**பிலிப்பியர் 4:13**

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவ ற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.

**ஜெபம்**: எல்லா சூழ்நிலைகளைப் பார்கிலும் பெரிய தேவனே, உலகத்தை ஜெயித்த உம்முடைய திருக்குமாரனாகிய கிறிஸ்துவிலே நிலைத்திருந்து நானும் ஜெயங்கொள்ள என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ கிருபை போதும்

பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டிலே, தேவ ஊழியராகிய பவுல் ஊடாக, 13 நிருபங்கள் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து, அதிலே பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தை மையமாக வைத்து, வேத வாக்கியங்களை தியானித்து வருகின்றோம். குறிப்பாக தேவ ஊழியராகிய பவுல், ஆவிக்குரிய போராட்டத்தை குறித்தும், தேவ சித்தத்தை நிறைவேற்றும் பணியில் வரும் சவால்களைக் குறித்தும், தன்னுடைய அனுபவ சாட்சியோடு விசுவாசிகளுக்கு எழுதியிருக்கின்றார். இந்நாட்களிலே, எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்யமாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து தியானித்து வருகின்றோம். தேவ ஊழியருடைய வாழ்க்கையிலே ஏற்பட்ட ஒரு சவாலைக் குறித்து கொரிந்து பட்டணத்திலுள்ள சபையிலுள்ள விசுவாசிகளுக்கு எழுதும் போது, "அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும் பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்." என்று கூறியிருக்கின்றார். உங்களுடைய வாழ்க்கையிலே பலவீனங்கள் ஏற்படும் போது எப்படிப் பட்ட சிந்தையுடையவர்களாக இருக்கின்றீர்கள்? அதை ஒருவருக்கும் தெரியாமல், மனதிலே வைத்துக் கொண்டு, நான் நல்லாக இருக்கின்றேன் என்று சொன்னால் சரியாகுமா? அப்படியல்ல, மாறாக, "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு என்ற அறிக்கை வாயிலே இருக்க வேண்டும். அவருடைய கிருபை எனக்கு போதும் என்பதை வாழ்க்கையின் அனுபவ சாட்சி வழியாக ஒவ்வொரு விசுவாசியும் கற்றுக் கொள்ள வேண்டும். அன்று வேதத்தில் காணும் பாத்திரங்களுக்கு செய்த ஜீவனுள்ள தேவன், இன்றும் எனக்கு செய்ய வல்லவராக இருக்கின்றார் என்பதில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும்.

**2 கொரிந்தியர் 12:9**

**அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்**

**ஜெபம்:** என்னை பெலப்படுத்ததுகின்ற என் தேவனாகிய கர்த்தாவே, நான் என் பெலவீன நேரங்களிலே, மறுதலிப்பில் வாழாமல், உம்முடைய கிருபையினாலே, சூழ்நிலைகளை மேற்கொள்ள வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.